பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 17 சனிக்கிழமை 31.05.2025 கதிர் 203

# லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு பற்றிய விமல் வீரவன்சவின் கருத்து ஓர் அவமதிப்பு

## விசாரணை வேண்டும் என மக்கள் அமைப்பு தலைவர் வலியுறுத்து

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் வழக்குத் தாக்கல் செய்வதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ள கருத்து ஆணைக்குழுவை அவமதிப்பதாகும். ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படும்போது ஊழல்வாதிகள் கலக்கமடைந்துள்ளார்கள். விமல் வீரவன்சவுக்குஎதிராகவிசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆணைக்குழுவில் வலியுறுத்தியுள்ளோம் என இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பின் தலைவர் ஜாமுனி கமல் துஷார தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடளித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிலையில் ஊழல்வாதிகள் பலர் தற்போது கலக்கமடைந்து ஆணைக்குழுவிற்கும், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கும் எதிராகபலகுற்றச்சாட்டுக்களைமுன்வைக்கின்றனர்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ' இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதியை சந்தித்து யாருக்கு வழக்குத் ☞ 8

இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி - தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் நேற்றைய பேச்சில் உருப்படியாக என்ன பேசப்பட்டது என்றால், கழுவுகிற மீனில் நழுவுகிற ☞ 2

# 9 மாவட்டங்களில் 1000 பேர் பாதிப்பு

## சீரற்ற காலநிலையால்

தென்மேற்கு பருவ பெயர்ச்சியால் நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 9 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். புத்தளம், ☞ 8

# இலங்கையில் முதலிட சீனர்கள் கடும் ஆர்வம்

## அந்நாட்டு அமைச்சர் தெரிவிப்பு

தற்போது இலங்கையில் நிலவும் அரசியல் மற்றும்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பு செயல்படுத்தும் வெளிப்படையானவேலைத்திட்டம்காரணமாக ☞ 8

# 23 ஆயிரம் பேருக்கு டெங்குப் பாதிப்பு

நாடளாவிய ரீதியில் இதுவரை 23 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்களும் 500 சிக்குன்குனியா நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் அனுஜா வீரசிங்க தெரிவித்தார்.

டெங்கு மற்றும் சிக்கன்குனியா பரவல் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை இலங்கை மருத்துவ சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில்பலபகுதிகளிலும்டெங்குமற்றும் சிக்கன்குனியாபரவல்தீவிரமடைந்துள்ளது. இதுவரை நாடளாவிய ரீதியில் 23,300 ம் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 45 சதவீதமான நோயாளர்கள் மேல்மாகாணத்திலேயேபதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாநகர சபை மற்றும் கம்பஹா மாவட்டத்தில் அதிக நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், தொடர்ந்து இரத்தினபுரி, காலி, மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கையும் ☞ 8

# தமிழ் அரசு – காங்கிரஸ் பேச்சில் இணக்கப்பாடு எதுவும் இல்லை

## ஆனால் சபைகளில் தமிழ் கட்சிகள் ஆட்சியமைப்பதற்கு பாதிப்பில்லை



உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைப்பது குறித்து இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கும்அகிலஇலங்கைத்தமிழ் காங்கிரஸிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சில் முழுமையான இணக்கம் எட்டப்படவில்லை. ஆனால் தமிழ் கட்சி அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள சபைகளில் அந்தக் கட்சிகள் ஆட்சியமைப்பதற்கு தமிழ் காங்கிரஸ் ஆதரவளிக்கும் ☞ 2

# பணம் கொடுத்து சுயேச்சைகளின் ஆதரவைத் திரட்ட என்.பி.பி. பேச்சு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தி சுயேச்சை உறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து அவர்களது ஆதரவை பெற்றுக் கொள்ள மூன்றுசுற்றுபேச்சுக்களைமுன்னெடுத்தது. ஆனால் களுத்துறை மாவட்டம் மத்துமக தொகுதியின் சுயேச்சைக்குழுவைச்சேர்ந்த நால்வரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்துகம தொகுதியில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து 13 உறுப்பினர்களும், ஐக்கிய ☞ 2

# கொக்கைனுடன் இத்தாலியப் பெண் கட்டுநாயக்காவில் நேற்றுக் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில்சுமார் 51 கோடிரூபாவுக்கும்அதிக பெறுமதிமிக்க கொக்கைன் வில்லைகளுடன் நாட்டிற்கு வருகை தந்திருந்த இத்தாலியை சேர்ந்த பெண் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையப் பணிகள் வருகை முனையத்தில் வைத்து நேற்றுக் ☞ 8

# விசா பிரச்சினைகளைத் தீர்க்க போலந்து விரைவில் நடவடிக்கை

போலந்து செல்லும் இலங்கையர்கள் முகம்கொடுக்கும் விசா பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய விரைந்து நடவடிக்கை

எடுக்கப்படும்என்றுபோலந்துஅயலுறவுத்துறை அமைச்சர் ரடோஸ்லாவ் சிகோர்ஸ்கி தெரிவித்தார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை போலந்து அயலுறவுத்துறை அமைச்சர் வியாழக்கிழமை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தார்.

நாட்டுக்கு வருகை தந்துள்ள போலந்து தூதுக்குழுவை வரவேற்ற பிரதமர் இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துதல் அத்துடன் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழிலாளர்கள் இடம் பெயர்வு, உயர்மட்ட சுற்றுலா டிஜிட்டல் நிர்வாக முறைமைகள் போன்ற பல முக்கிய துறைகள் குறித்து பிரதமரும் வெளியுறவு அமைச்சரும் கருத்துக்களைப் ☞ 2

# வேறொருவரின் குழந்தைக்கு அநுர பிறப்பு சான்றிதழ் தயாரிக்க முயற்சி

## இப்படிச் சாடுகிறார் ஐ.தே.கட்சி எம்.பி.

மஹிந்தானந்த அழுத்கமகேவை சிறையிலடைப்பதற்கான முறைப்பாட்டை வழங்கியது நாமே தவிர, ஜே.வி.பி. அல்ல. அதேபோன்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுவுக்குஎதிராக வழக்குத் தொடுப்பதற்கும் ஜே.வி.பி. விரும்பவில்லை. ஆனால் இந்த வழக்குகளில் வேறொருவரின் குழந்தைக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பிறப்புசான்றிதழ் தயாரிக்கமுயற்சிக்கின்றாரென ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று ☞ 8

# கொத்தலாவல பல்கலை மருத்துவ பீடத்திற்கு இலங்கை மாணவர்களைச் சேர்ப்பதற்கு தடை

## ஆளும்தரப்பின் முடிவுக்கு எதிராக ஐ.தே.க. போர்க்கொடி

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு உள்நாட்டு மாணவர்களை இணைக்க ஆளும்தரப்பு விதித்துள்ள தடையை உடன்டியாக நீக்காவிட்டால் அதற்கெதிராக் கடுமையான தீர்மானங்களை ஐக்கிய தேசியக் கட்சி எடுக்கும் என்று அந்தக் கட்சியின் உப தலைவரும் முன்னாள் கல்வி அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொழும்புக் காரியாலயத்தில் நேற்று ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

மீனாக இரு தரப்பும் நடந்துகொண்டன என்பதுதான் உண்மை. பொது எதிரிக்கு முன்னால்தமிழ்மக்களிடம்சேதாரமில்லாமல் தம்மைக் காத்துக்கொள்ளும் உத்தியோடு, தமக்கிடையிலான கட்சி மோதல்கள் காரணமாக உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியதிகாரம்என்பிபியிடம்போய் அதனால் மக்கள்மீண்டும்தம்மீது கோபப்பட்டுவிடாமல் இருக்கும் உத்தியோடு சந்திப்பு நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது.

என்றாலும் இந்தச் சந்திப்பின் மூலம் தமிழ் அரசுக் கட்சி வடக்கு கிழக்கில் 30க்கும் மேற்பட்ட சபகளில் ஆட்சியமைப்பது உறுதியாகிஇருக்கின்றது. அதேபோன்றுதமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய மூன்று இடங்களில் ஆட்சியமைப்பது உறுதியாகி இருக்கின்றது. சாவகச்சேரியில் தலா 6 என்ற இரு கட்சிகளுக்கும் சமமான உறுப்பினர்கள் இருப்பதன் காரணமாக அது பற்றிய இறுதித் தீர்மானம் இன்னும் எட்டப்படவில்லை. எனினும் சாவகச்சேரி நகர சபையில் தமிழ் அரசுக் கட்சியைவிட தமக்கு கிடைத்த வாக்குகள் அதிகம் என்று சுட்டிக்காட்டினர். அதாவது ஆசனங்கள் சமம் என்றாலும்வாக்குகள்அதிகம்என்பதால்அந்தச் சபையையும் தமக்கே விட்டுத்தரவேண்டும் என்பது அதன் உள்நோக்கமாக இருந்தது. இருப்பினும் இது தொடர்பில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவரது கருத்துப்படிஇந்தச்சந்திப்புஅர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் நடந்து முடிந்தது. உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது குறித்துப் பேசுவதற்காகச் சென்ற தாங்கள் அது பற்றி மட்டுமே கவனம் செலுத்தி அந்த விவகாரத்தில் ஒரு புரிந்துணர்வுக்கு வந்திருப்பது நல்ல விடயம் என்பது அவரது கருத்து. ஆனால் சந்திப்பு முடிந்ததும் கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார் இணக்கப்பாடு எதுவும்எட்டப்படவில்லைஎன்று தெரிவித்தார்.

அதன் பொருள் என்னவென்றால், வடக்கு கிழக்கில் உள்ள சபைகளில் அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்க் கட்சி ஆட்சியமைப்பதற்குத் தமது ஆதரவு என்று ஏற்கனவே தமது தமிழ்த் தேசியப் பேரவை அறிவித்தே தமது நிலைப்பாடு, அதிலிருந்து மாற மாட்டோம் என்பதை சந்திப்பில் காங்கிரஸ் உறுதிப்படுத்தியது. அப்படிப் பார்த்தால் அதிக சபைகளில் அதிக இடங்களைத்தமதுகட்சியேகொண்டிருப்பதால் காங்கிரஸின் ஆதரவுதமக்கே என்று கருத்தில் எடுத்துக்கொண்டு, அப்படித் தமக்கு ஆதரவு தர இணங்கியிருப்பதன் காரணமாக, தாமும் ஏற்கனவே அறிவித்திருப்பதின்படி ஏனைய தமிழ்க் கட்சிகள் முதன்மை பெற்றுள்ள சபைகளில் அந்தந்த தமிழ்க் கட்சிகள் ஆட்சியமைக்க ஆதரவு தருவோம் என்றும், அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் மூன்று சபைகளில் தமிழ் காங்கிரஸ் ஆட்சியமைக்க தமிழ்அரசு ஆதரவுதரும்என்றும்சிவஞானம் தெரிவித்தார்.

ஆக மொத்தத்தில் இதுவரையில் ஊடகங்களில் சொல்லிக் கொண்டிருந்த விடயத்தை கொக்குவிலில் உள்ள ‘பொக்ஸ்‘ விடுதியின்வராந்தாவில்காற்றாட ஆளையாள் நேரில் பார்த்து அமர்ந்து சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தவிர இந்தப் பேச்சில்அதிக முன்னேற்றம்எதுவும்இல்லை. இருப்பினும் இரு தரப்பினரும் நேருக்கு நேர் தத்தமது நிலைப்பாட்டைப் பரிமாறிக் கொண்டார்கள் என்பதால், அதிலிருந்து இறங்கி ஆளையாள் காலை வார மாட்டார்கள் என்கிற நம்பிக்கை மட்டுமே நேற்றைய இரு தரப்புப்பேச்சின் அடைவு என்று சொல்லலாம். இருந்தாலும் அரசியலில் இத்தகைய ‘ஜென்டில் மேன் அக்ரிமென்ட்‘ எல்லாம் எத்தனை நாள்களுக்குச் செல்லுபடியாகும் என்பது கேள்விக்குறிதான். சாவகச்சேரி விடயத்திலேயேஒருஇணக்கம்ஏற்படவில்லை என்றால் இந்த ‘ஜென்டில்மேன் அக்ரிமெனட்‘ என்னவாகும் என்று சொல்லமுடியாது.

இப்போதைக்குப் இரு கட்சிகளுக்கும் இடையிலான பேச்சு மேலும் குழப்பங்களோ பிரச்சினைகளோ இன்றி சுமுகமாக முடிந்தது என்ற மட்டும் வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். இதன் பயனை தமிழ் மக்கள் அனுபவிக்க முடிந்தால் அது சிறப்பாக இருக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ் அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதே தமது நிலைப்பாடு என்று தெரிவித்ததன் மூலம் தமிழ் அரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ள சபைகளில் அந்தக் கட்சி ஆட்சியமைக்க காங்கிரஸும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ள சபைகளில் ஆட்சியமைக்க தமிழ் அரசும் பரஸ்பர ஆதரவை வழங்குவதற்கான உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

வட, கிழக்குமாகாணங்களில்உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சியமைப்-பது குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸிற்கும் இடையி-லான சந்திப்பு நேற்று மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழ் அர-சுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சிவஞானம் மற்றும் பொதுச் செயலாளர் சுமந்திரன் ஆகியோரும், தமிழ் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமாரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் கஜேந்திரனும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது வட, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சியமைப்பதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பின்போது வட, கிழக்கு மாகா-ணங்களில் சகல உள்ளூராட்சி மன்றங்க-ளிலும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஆட்சியமைப்பது அவசியம் என தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர் எனவும், அதன்படி தமது இரு கட்சிகளும் ஒத்துழைப்புடன் இணைந்து செயற்பட்டால் அவ்விரு மாகாணங்களிலும் கணிசமான சபைகளில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றமுடியும் என அவர்கள் சுட்டிக் காட்-டினர் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளிக்கையில், இரு தரப்பினருக்கும் இடையில் கொள்கை ரீதியில் இணக்கப்பாடு எட்டப்படும் பட்சத்தில் இணைந்து ஆட்சியமைக்க முடியும் எனவும், மாறாக வெறுமனே தேர்தலை இலக்காக வைத்து சபைகளையும், பதவிகளையும் கைப்பற்றுவதற்காக மாத்திரம் கூட்டிணை-யவேண்டிய அவசியம் தமக்கு இல்லை என எடுத்துரைத்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு நடைபெற்று முடிந்த உள்ளூ-ராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் தேசியத்தைப் பாதுகாப்பதற்கே தமிழ் மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றனர் என்றும், எனவே தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி வாக்குக் கோரிய சகல கட்சிகளும் அதனைப் பாது-காத்து நடைமுறைப்படுத்தும் வகையில் இணைந்து செயற்படவேண்டும் எனவும் தான் தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தினார் என்றும் கஜேந்திரகுமார் கூறினார்.

இதேவேளை, இச்சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன், ஏற்கனவே இரு கட்சிகளாலும் வெளியிடப்பட்ட நிலைப்பாடுகளுக்கு அமைய ஒவ்வொரு சபைகளிலும் கூடுதல் ஆசனங்களைப்பெற்ற கட்சி ஆட்சியமைப்பதற்கும், மற்றைய கட்சி அதற்கு ஆதரவு அளிப்பதற்கும் இதன்போது இணக்கப்பாடு எட்டப்பட்டதாகத் தெரிவித்தார்.

## பணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தியிலிருந்து 10 உறுப்பினர்களும், சுயேச்சை குழுக்களிலிருந்து நால்வரும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். சுயேச்சைகள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில்இணைந்துள்ளனர். எனவேதற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் 14 உறுப்பினர்கள் உள்ளனர்.

அதற்கமைய சுயேச்சை குழுவின் தலைவர் கசுன் முனசிங்கவை தலைவராக நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தி இவ்வாறான சுயேச்சை உறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து அவர்களது ஆதரவை பெற்றுக் கொள்ள மூன்று சுற்று பேச்சுகளை முன்னெடுத்தது. எவ்வாறிருப்பினும் மத்துகம தொகுதியின் சுயேட்சை குழு ஆளும்தரப்புத்தின் பேரம் பேசலுக்கு விலை போகவில்லை.

தற்போது ஐக்கிய மக்கள் சக்தி முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அடுத்து இந்நாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும். ஒரு சில மாதங்களில் 23 இலட்சம் வாக்குகளை இழந்துள்ள தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புத்தால் ஒருபோதும் மீண்டும் இந்நாட்டில் ஆட்சியமைக்க முடியாது என்றார்.

# அமைச்சரவை மாற்றம் என்பது எதிர்க் கட்சிகளின் முழுப்பொய்

## அமைச்சர் ஹந்துனெத்தி தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்திக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் முரண்பாடு தீவிரமடைந்துள்ளதாகவும், அதனால் வெகுவிரைவில் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுவதாகவும் எதிர்க்கட்சிகள் முன்வைக்கும்கருத்து முற்றிலும்பொய்யானது என்று கைத்தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உப்புபிரச்சினைதற்போதுமுடிவடைந்துள்ள நிலையில் எதிர்க்கட்சியினர் தற்போது அமைச்சரவை மாற்றத்தை கையில் எடுத்துள்ளார்கள். தேசிய மக்கள் சக்திக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. பொதுவான இணக்கப்பாட்டுடன் செயற்படுகிறோம்.

அமைச்சரவை மாற்றம் மற்றும் பிரதமர் பதவியில் மாற்றம் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுக்கொள்வது முற்றிலும் அடிப்படையற்றது. அமைச்சரவையில் சகல உறுப்பினர்களும் கூட்டுப்பொறுப்புடன் செயற்படுகின்ற நிலையில் எவ்வித கருத்து முரண்பாடுகளும் ஏற்படவில்லை.

ஊழல் மோசடிக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவோம். கடந்த கால ஆளும்தரப்புக்கள் ஊழல்வாதிகளைப் பாதுகாத்தன. எமக்கும் ஊழல்வாதிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

நீதிமன்றம் மற்றும் விசாரணை நிறுவனங்கள் சுயாதீனமான முறையில் செயற்படுகின்றன. நீதிமன்றம் மற்றும் விசாரணைநிறுவனங்களின்செயற்பாடுகளில் ஆளும்தரப்பு தலையிடவில்லை. ஆகவே ஊழல்வாதிகள் கைது செய்யப்படுவதை அரசியல் பழிவாங்கள் என்று குறிப்பிட வேண்டாம் என்றார்.

## விசா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிமாறிக் கொண்டனர்.

இந்த சந்திப்பின்போது போலந்து செல்லும் இலங்கையர்கள் முகம்கொடுக்கும் விசா பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய அவசர நடவடிக்கை எடுக்கப்படும் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி தெரிவித்தார்.

இரு நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.இச்சந்திப்பில் இலங்கைக்கான ஐரோப்பிய சங்கத்தின் தூதுவர் கார்மென் மோரேனோ ஆசிய-பசுபிக் பிராந்தியத்தின் துணைத் தலைவர் மோனிகா பைலெய்ட் புதுடில்லியில் உள்ள போலந்து தூதரகத்தின் பொறுப்பதிகாரி பியோட்ர் ஸ்விட்டல்ஸ்கி மற்றும் புதுடில்லியில் உள்ள போலந்து தூதரகத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த வெளியுறவு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகீஸ்வர குணரத்ன ஆகியோர் பங்கேற்றனர்.

## கொத்தலாவல ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்துதெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழத்தின் வைத்திய துறைக்கு உள்நாட்டு மாணவர்களை இணைத்துக்காள்வதை ஆளும்தரப்புநிறுத்தியுள்ளது. முன்னாள்கல்வி அமைச்சர் என்ற வகையில், ஆளும்தரப்பு இந்தத் தீர்மானத்தை விசேடகுழுவொன்றின் தீர்மானத்துக்கு அமையவா அல்லது கல்வி அமைச்சரின் தனிப்பட்ட தீர்மானத்துக்கு அமையவா அல்லது எந்த அடிப்படையில் எடுத்தது என கல்வி அமைச்சரான பிரதமர் ஹரினி அமரசூரியவிடம் கேட்கிறேன்.

ஏனெனில் உள்நாட்டு மாணவர்கள் அனைவருக்கும்அரசபல்கலைக்கழகங்களுக்கு செல்லமுடியாது.அரசபல்கலைக்கழகங்களுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு தொகையினரே இணைத்துக்கொள்ளப்படுவதால், தகுதியுள்ள மாணவர்கள் பலர் பணம் செலுத்தி, இந்தப் பல்கலைக்கழகத்தில் இணைந்து அவர்களின் வைத்தியர் கனவை நனவாக்கிக்கொள்கின்றனர்.

இந்நிலையில், உள்நாட்டு மாணவர்களை இணைத்துக்கொள்ள தடைவிதிப்பதால், அங்கு கல்விக்கான சுதந்திரம் மறுக்கப்படுவதுடன் அந்த மாணவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று கல்வியைத் தொடர்வதால், எமது அன்னிய செலாவணி பெருமளவில் வெளிநாடுகளுக்கு செல்கின்றன. கல்வி அமைச்சர் ஹரினியும் வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். அதனால் அவர் இதுதொடர்பில் சிந்திக்கவேண்டும். மக்களின்ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாக தெரிவித்து வந்த இந்த ஆளும்தரப்புதற்போதுகல்விகற்கும்ஜனநாயக உரிமையை இல்லாமலாக்கி இருக்கிறது.

அதேநேரம் எமது நாட்டில் அதிகமாக சர்வதேச பாடசாலைகள் இருக்கின்றன. அதில் கல்வி கற்கும் மாணவர்கள் உயர் கல்வியை கற்பதற்கு எமது நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட வேண்டும். அதற்காக ஊக்குவிக்கவேண்டும். அதன் மூலமே எமது அந்நிய செலாவணி வெளிநாடுகளுக்குசெல்வதைதடுத்துக்கொள்ள முடியுமாகிறது.

அவ்வாறு இல்லாமல் இருக்கும் பல்கலைக்கழகத்துக்கும் உள்நாட்டு மாணவர்களை இணைத்துக்கொள்வில்லை என்றால், அந்த மாணவர்களின் நிலை என்னவாகும். இது தொடர்பில் ஆளும்தரப்பு சிந்தித்துச் செயற்படவேண்டும்.

நல்லாட்சிஆளும்தரப்புகாலத்தில்நாங்கள் ஆரம்பித்த சுரக் ஷா காப்புறுதி திட்டத்தை அரச பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் வழங்கவில்லை. சர்வதேச பாடசாலை மணவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுத்தோம். ஏனெனில்அந்தப்பாடசாலைகளில் கல்வி கற்பதும் எமது நாட்டு மாணவர்களே என்பதலாகும். இவ்வாறு திறந்த மனதுடனே எமது ஆளும்தரப்பு செயற்பட்டது.

அதனால் இன்றைய ஆளும்தரப்பு கொத்தலாவலபாதுகாப்புபல்கலைக்கழகத்தின் வைத்தியதுறைக்குஉள்நாட்டுமாணவர்களை இணைத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு எடுத்த தீர்மானத்தை உடனடியாக மாற்றிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இது தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தி, மாற்று தீர்மானங்களை மேற்கொள்வோம் என்பதை ஆளும்தரப்புத்துக்கு தெரிவித்துக்கொள்கிறோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை போக்குவரத்துகள் பாதிப்பு; மின் துண்டிப்பு

(கிஷாந்தன்)

நுவரெலியா பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் வீசும் பலத்த காற்று காரணமாக, நானுஓயா உடரதெல்ல பிரதான வீதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்ததில், ஒரு வீடு பகுதியளவு சேதமடைந்துள்ளதோடு, வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான வீதியில் விழுந்த மரத்தை நானுஓயா பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் இணைந்து அதை அகற்றும் வரை, வியாழன் பிற்பகல் 1:00 மணி முதல் 2:00 மணி வரை சுமார் ஒரு மணித்தியாலயம் போக்குவரத்து தடைபட்டிருந்தது.

அத்தோடு, பகுதியளவு சேதமடைந்த வீட்டில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

வீசும் பலத்த காற்று மற்றும் மழை காரணமாக, ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியிலும் மற்றும் இணை வீதிகளிலும் வாகன சாரதிகள் கவனமாக வாகனங்களை செலுத்துமாறு நானுஓயா பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும், வியாழன் காலை கொட்டகலை டிரேட்டன்கொலனி பகுதியிலும் மரம் ஒன்று சரிந்து விழுந்ததில் வீடு ஒன்று முழுமையாக சேதமமைந்துள்ளது.

யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும், பொருள்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பெய்து வரும் கனமழை காரணமாக, வியாழன் அதிகாலை 1:00 மணி முதல் கினிகத்தேனை-நோர்டன்பிரிட்ஜ் பிரதான வீதியில் 33,000 வாட் உயர் மின்னழுத்த மின்கம்பி கொண்ட ஒரு மின்கம்பம், மரங்கள் மற்றும் பல பாறைகள் விழுந்ததாக நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



ஹைலாங்வங்குவ எனும் பகுதியில் இந்த மரங்களும் மின்கம்பிகளும் விழுந்துள்ளதாகவும், இந்த சூழ்நிலையில், வீதியின் போக்குவரத்து சீரடையும் வரை ஹட்டன் வீதியின் ஊடாக வாகனங்களை ஓட்டுமாறு நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் சாரதிகளைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நோர்டன்பிரிட்ஜ் முதல் கினிகத்தேனை வரையிலான உயர் மின்னழுத்த மின்கம்பி அமைப்பு சரிந்ததால், நோர்டன்பிரிட்ஜ் மற்றும் கினிகத்தேனை பகுதிகளில் மின்சாரம் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்தோடு, காசல்ரீ பகுதிகளில் வீசிய பலத்த காற்றுடன் கூடிய கனமழை காரணமாக, ஹட்டன்-நோர்டன்பிரிட்ஜ் பிரதான வீதியில் பல இடங்களில் பல பெரிய மரங்கள் விழுந்துள்ளதாகவும், இதனால் வெள்ளிக்கிழமை காலை 9:00 மணி முதல் வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லெதண்டி தோட்ட பகுதியில் மரம் விழுந்துள்ளதாகவும், மின்சார சபை ஊழியர்கள் விழுந்த மரங்களை வெட்டத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான வீதியில் விழுந்த மரங்களை வெட்டப்படும் வரை வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர்.

இதேவேளை, நோர்டன்பிரிட்ஜ் மின்சார சபையின் ஊடாக வழங்கப்படும் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதன் காரணமாக ஹற்றன் வெலிஓயா தோட்டத்தின் மேற்பிரிவில் உள்ள சுமார் 300 குடும்பங்கள் மோசமான வானிலை காரணமாகவும், மின்சாரம் இல்லாததாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின்சாரம் இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ள ஹற்றன் வெலிஓயா பகுதி மக்கள், பலத்த காற்று மற்றும் மோசமான வானிலை காரணமாக தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார இணைப்பு உடைந்துள்ளதாகவும், இதன் காரணமாக தங்கள் தோட்டத்தில் இரண்டு நாள்களாக மின்சாரம் இல்லை என்றும் கூறுகின்றனர். நோர்டன் பிரிட்ஜ் மின்சார சபையின் அதிகாரிகளுக்கு இது குறித்து தெரிவிக்கப்பட்ட போதிலும், இதுவரை சரியான பதில் கிடைக்கவில்லை எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மின்சாரம் இல்லாததால் பல கோழிப்பண்ணைகளை இயக்க முடியாமல் இருப்பதாகவும், குளிர் காலநிலையால் பல விலங்குகள் உயிரிழக்கும் அபாயம் இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக நோர்டன் பிரிட்ஜ் மின்சார வபையின் வாடிக்கையாளர் சேவை மையத்தின் அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும், அது பலனளிக்கவில்லை என்பது

## தமிழ் அரசு கட்சி திருமலை மாவட்ட உறுப்பினர்களுக்கான செயலமர்வு

(ஹஸ்பர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு திருக்கோணமலை மாவட்டத்தில் தெரிவாகிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் மூலம் கட்சி மாவட்டப் பணிமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்றது.

குறித்த நிகழ்வானது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்களது ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் 36 உறுப்பினர்கள் பங்கு கொண்டனர், இதன் மூலம் சிறந்த தலைமைத்துவப் பண்பு உள்ளிட்ட பல விடயங்கள் தெளிவூட்டப்பட்டிருந்தன.

இதில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி தேர்தலில் தெரிவான இலங்கை தமிழரசு கட்சி உறுப்பினர்கள் தவிசாளர்களாக தெரிவாகவுள்ளவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.







## நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் பாடசாலை திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு 'மாணவர் மகிமை' வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய கல்முனை கல்வி வலய நிந்தவூர் அல் - மஸ்லம் வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி திண்மக் கழிவகற்றும் தொட்டிகள் நேற்று 2025.05.30 வழங்கி வைக்கப்பட்டன . இது தொடர்பான நிகழ்வு நிந்தவூர் அல்-மஸ்லம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் இஷட் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஐ எம் நிஸ்மி, செயற்பாட்டுப் பணிப்பாளர் ஏ புஹாது ஆகியோர் கலந்து கொண்டு திண்மக் கழிவகற்றலுக்கான பிளாஸ்டிக் தொட்டிகளை வழங்கி வைத்தனர்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அகதிகள் நாடு திரும்பும் வழி தெளிவாக இருக்க வேண்டும்

**இலங்கை ஆட்சியாளர்கள் பல ஆண்டுகளாக வெளிநாடுகளில் அகதியாக வாழும் இலங்கைப் மக்கள், குறிப்பாக இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகள், தாய்நாட்டுக்குத் திரும்பி மீண்டும் தங்களது வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளன. ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் (ஷீஹிசூஹிளீயூ) வழங்கிய ஒத்துழைப்பின் அடிப்படையில், இந்தியாவில் அகதிகளாக வாழும் இலங்கையர்கள்தாங்கள்விரும்பினால்தாய்நாட்டுக்குத் திரும்பும் வகையில் விருப்பப்பூர்வ மீள்வாழ்வு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.**

**இத்தகைய பின்னணியில், 75 வயதான ஓர் அகதி, பல ஆண்டுகள் இந்தியாவில் அகதியாக இருந்தபின் இலங்கைக்குத் திரும்ப முயன்ற நிலையில், பலாலி விமான நிலையத்தில் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பது மிகுந்த கவலையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கைத் திரும்பும் விருப்பமுள்ள அகதிகள் மத்தியில் பயத்தையும், ஐயப்பத்தையும் உருவாக்கும் சம்பவமாக அமைந்திருக்கிறது.**

**இது போன்ற நடவடிக்கைகள் ஆளும்தரப்பால் விரும்பப்பட்ட வழியொன்றை முழுமையாகத் தகர்த்துப் போடக்கூடிய அபாயத்தை உள்ளடக்கி நிற்கின்றன. ஒரு பக்கம் அகதிகள் நாடு திரும்பவேண்டும், அவர்களுக்கு வசதிகள் வழங்கப்படும் என அறிவிக்கப்படுகின்றபோது, மறுபக்கம் அவர்களது நாடு திரும்பலுக்குப் பின்னர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை மக்கள் எப்படி புரிந்து கொள்வார்கள்?**

**அதிலும் இப்போதைய அநுரகுமார தலைமையிலான ஆட்சி, புதிய நம்பிக்கைகளுடன் தொடங்கிய நிலையில், இலங்கைத்திரும்பும்அகதிகள்மீதானஅணுகுமுறையில் மாறுதலா? என்பதுபோன்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. கடந்த ஆட்சிகளில் இருந்த ஒருமுக கொள்கையின் இடத்தில் தற்போது சட்டசிக்கல்களைக் கொண்டு அகதிகளை தடுக்கும் முயற்சி அரசின் இரட்டை மொழியை முன்வைப்பதாக மட்டுமல்லாமல், மனித உரிமை மீறலாகவும் பார்க்கப்படலாம்.**

**அதன் பொருட்டு, ஆளும்தரப்பினருக்கு மிகத் தெளிவானஅரசியல்மற்றும்நிர்வாகக்கொள்கையொன்று உடனடியாக வகுக்கப்பட வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் தங்கள் சொந்த நாட்டிலிருந்து வேரறுக்கப்பட்டு, வெளிநாடுகளில் அகதிகள் ஆக வாழ்ந்தவர்கள் மீண்டும் தங்களது மண்ணில் உறுதியாக வாழக்கூடிய வகையில், பாதுகாப்பான மற்றும் சட்டத்தை மீறாத நிலையை உருவாக்குவதே திசைகாட்டி ஆளும்தரப்பின் பொறுப்பு.**

**இதற்கான தெளிவான அரசு நிலைப்பாடும், வழிகாட்டுதல்களும், பொதுமக்களுக்கு மட்டுமல்ல, அரச நிறுவனங்கள், அகதிகள் மற்றும் தொடர்புடைய சர்வதேச அமைப்புகளுக்கும் விளக்கமாக வழங்கப்பட வேண்டியது அவசியம். இல்லையெனில், 'திரும்புங்கள்' எனக் கூப்பிடும் குரலும், 'தடுப்புக் காவலில் அடையுங்கள்' என நடவடிக்கை எடுக்கும் கைகளும் ஒரே ஆளும்தரப்புக்குள் பேசும் இரட்டை முகங்களாக இருக்கவேகூடாது.**

**அதனால்தான் இன்று தேவையானது – அகதிகள் நாடு திரும்பும் விடயத்தில் தெளிவும், சட்டபூர்வத்தன்மையும், நம்பிக்கையூட்டும் அரசுப் போக்கும்தான்.**

# கற்பிட்டி முகத்துவார கிராமத்திற்கான மாதாந்த மகப்பேறு சிகிச்சை மையம்!

*(சியாஜ்)*

*கற்பிட்டி முகத்துவார கிராம மக்களின் நீண்ட நாள் தேவையாக காணப்பட்ட மகப்பேறு சிகிச்சை சேவையை கற்பிட்டி பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஆர்.எம் முஸம்மிலின் முயற்சியின் ஊடாக கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி தம்சிறியின் ஏற்பாட்டில் எதிர்வரும் 2025-06-17 ஆம் திகதி முதல் மாதாந்தம் மகப்பேறு சிகிச்சை சேவையை நடத்துவதற்கான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*இது தொடர்பான மேற்பார்வை மற்றும் விசேட கலந்துரையாடல் ஒன்று வியாழக்கிழமை முகத்துவாரம் பாலர் பாடசாலையில் இடம்பெற்றது. இதில் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம் முஸம்மில், கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி எம்.முர்ஷிதா, பொது சுகாதார பரிசோதகர் எம்.சப்ரீன், கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் அதிகாரிகள் உட்பட ஊர் பிரமுகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.*





# நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலன்னறுவை நிலையத்திற்கு இடமாற்றம்

*(பாறுக் ஷிஹான்)*

*16 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*அதன்படி, வத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நுகேகொடை பொலிஸ் நிலையத்திற்கும், தங்காலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வத்தளை பொலிஸ் நிலையத்திற்கும், பொலிஸ் சட்ட பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் மனித உரிமைகள் பிரிவுக்கும், எல்பிட்டிய பொலிஸ் பிரவின் பொறுப்பதிகாரி கொஸ்கொடை பொலிஸ் நிலையத்திற்கும், வாதுவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாத்தளை பொலிஸ் நிலையத்திற்கும், மத்திய குற்றப் புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி வாதுவை பொலிஸ் நிலையத்திற்கும், அதிவேக வீதி பொலிஸ் பிரிவிலிருந்தவருக்கு அதிவேக வீதி பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியாகவும்,*

*நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலன்னறுவை பொலிஸ் நிலையத்திற்கும், பன்சியகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிந்தவூர் பொலிஸ் நிலையத்திற்கும் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.*

*மேலும், கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பன்சியகம பொலிஸ் நிலையத்திற்கும், பொத்துப்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கும், கம்பளை பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பொத்துப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கும், தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கலென்பிந்துனுவெள பொலிஸ் நிலையத்திற்கும்,*

*கலென்பிந்துனுவெள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கும் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.*

*தேசிய பொலிஸ் கற்கை நிலையத்தினுடைய நிர்வாக பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ. என் டி. பி.சி. லிங்கன் நியமிக்கப்பட்டுள்ளார்.*

# மாணவர்கள் சிறுநீர் தொற்று, சிறுநீரக கற்கள் போன்ற நோய்கள் ஏற்படும் அபாயத்தில்...!

(நூருல் ஹுதா உமர்)



பாடசாலையிலுள்ள கழிவறைக்குச் செல்ல மாணவர்கள் ஆர்வம் காட்டாமல் இருப்பதை அறிய முடிகிறது. இப்பிரச்சினைகள் மிகவும் அவசரமாக பரிசீலிக்கப்பட வேண்டியதுடன் ஆரோக்கியமற்ற நிலைமைகள் காரணமாக சிறுநீரக நோய்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்ய நமதுகுழந்தைகளுக்குஆரோக்கியமான சூழலை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தெரிவித்தார்.

அவரதுஅறிக்கையில்மேலும்,அண்மைக்காலமாக பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளை கண்காணிக்கச் சென்ற வேளை மாணவர்கள் பாடசாலையிலுள்ள கழிவறைக்குச் செல்ல ஆர்வம் காட்டாமல் இருப்பதை அறியக்கிடைத்தது. அசுத்தமான மற்றும் துர்நாற்றம் வீசும் கழிவறைகளே இதற்கு முக்கிய காரணம் என தெரியவந்தது. மலசல கூடங்களை சுத்தப்படுத்த ஆளனிப்பற்றாக்குறை மற்றும் அதற்கான போதிய நிதி உதவி இன்மை போன்ற குறைகள் உள்ளதாக விசாரணைகளில் அறிய முடிகிறது.

இதனால் மாணவர்கள் கழிவறைக்குச்செல்லதயங்குவதுடன் அதை அடக்கி வைத்துக் கொள்ளப் பழகிக் கொள்கின்றனர். இதனால் அவர்களுக்கு, சிறுநீர் தொற்று, சிறுநீரக கற்கள் போன்ற நோய்கள் ஏற்பட வழிவகுப்பதோடு பல நடத்தைப் பிரச்சினைகளுக்கும் ஆளாக நேரிடுகிறது.

இப்பிரச்சினைகள் மிகவும் அவசரமாக பரிசீலிக்கப்பட வேண்டியதுடன் ஆரோக்கியமற்ற நிலைமைகள் காரணமாக சிறுநீரக நோய்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்ய நமது குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

இதுகுறித்து பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுமற்றும்பெற்றோர்கள்கவனம்செலுத்திஅதிபருடன் கலந்துரையாடி துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களின் சிறுநீரக நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை என்று தெரிவித்துள்ளார்.

# 37 வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வு!

(கேதீஸ்)

நுவரெலியா கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் இந்துக் கலாச்சாரதிணைக்களத்தின்இணைப்பாளரும் மத்திய மாகாண கல்வி அமைச்சு தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுகளின் பிரத்தியேக செயலாளருமான விஸ்வநாதன் சாந்தகுமார் தனது 37 வருட கல்வி சேவையிலிருந்து கடந்த வாரம் ஓய்வு பெற்றார்.

நுவரெலியா கந்தப்பளை சந்திரகாந்தி பிரதேசத்தை பிறப்பிடமாகவும் ஹற்றன் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை இராகலை சென்லெனாட்ஸ் நடுக்கணக்கு தமிழ் மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை இராகலை தமிழ் மகா வித்தியாலத்திலும் உயர் கல்வியை மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியிலும் கற்றார்.

1988 ஆம் ஆசிரியர் தொழிலில் இணைந்துக்கொண்ட இவர் 1988 ஆம் ஆண்டு முதல் 2000 வரை டயகம கிழக்கு தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார்.

1993 ஆம் ஆண்டு பெனிதெனிய ஆசிரியர் பயிற்சி கலாச்சாலையில் ஆங்கில ஆசிரியராக தனது ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்தார். இவர் டயகம கிழக்கு தமிழ் வித்தியாலய மாணவர்களின் வெற்றிக்கு பாதை வகுத்துத் தந்தவராவார். ஆங்கில பாடத்தை கற்பிப்பதோ கற்பதோ கடினமல்ல. அது எளிது என்கிற புதுப்புரட்சியை சமூகத்தின் மத்தியிலே ஏற்படுத்திய ஆளுமையாளர். மிக சுவாரசியமாக மாணவர்கள் விரும்பும் வகையில் ஆங்கிலம் கற்பிக்கும் கலையை ஏற்படுத்தியவர். இவரது கற்பித்தல் பாணி தனித்துவமானது. டயகம கிழக்கு பிரதேச கல்வி வளர்ச்சியில், பலரது கல்வி வாழ்வில் சுடரேற்றிய பெருமையும், பங்கும் இவருக்குண்டு.

2000 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் இந்து கலாச்சார திணைக்களத்தின் இணைப்பாளராக கடமையாற்றினார்.



2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரத்யேக செயலாளராகவும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் (தேசத்தை கட்டியெழுப்புதல்) பிரத்தியேக செயலாளராகவும் கடமையாற்றினார்.

அகில உலக இந்து மாநாடு மற்றும் பல மாகாண மட்ட சாகித்திய விழாக்களை முன்னின்றுநடத்தியபெருமைஇவரைசாரும். அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு முதல் மத்திய மாகாண கல்வி திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் 2018 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஹற்றன் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளருமாகக் கடமையாற்றினார். அங்கிருந்து நுவரெலியா கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற அவர் 2020 ஆம் ஆண்டு முதல் ஓய்வு பெறும் வரை அங்கு கடமையாற்றினார்.

நுவரெலியா கல்வி வலயத்திலே ஆங்கிலம்,சைவசமயம் மற்றும் தகவல் தொழிநுட்ப பாடங்களுக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றினார். இவருடைய காலப்பகுதியிலே என்றும் இல்லாதவாறு க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கில பாடப் பெறுபேறுகள் நுவரெலியா கல்வி வலயத்தில் உச்சத்தை தொட்டன. தமது கல்வி வலயத்தில் பாடசாலை மட்டத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கில பெறுபேற்றை அதிகரிக்க அயராது பாடுபட்ட ஆங்கில ஆசிரியர்களை வலய மட்டத்தில் பதக்கங்கள் அணிவித்து கௌரவித்த பெருமை இவரையே சாரும். நுவரெலியா கல்வி வலயத்தில் பெரும்பாலான பாடசாலைகளுக்கு ஸ்மாட் வகுப்பறைகளை வெளி நிறுவனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி அந்த நிறுவனங்களின் பங்களிப்புடன் ஸ்மாட் வகுப்பறைகளை நிறுவினார். மேலும் ஸ்மாட் கற்பித்தல் பலகைகளையும் பல பாடசாலைகளுக்கு பெற்றுக்கொடுத்தார்.

கொவிட் காலப்பகுதியில் கொழும்பு ரொட்டறிக் கிளப் ஊடாக நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் செனிடைசர் போத்தல்கள்,முகக்கவசங்கள் என தேவையானவற்றை இலவசமாக பெற்றுக்கொடுத்தார். நுவரெலியா மாவட்டத்தில் கொவிட் காலப்பகுதியில் பொருளாதாரத்தில் பின்னடைவைச் சந்தித்த பெண் தலைமைத்துவ குடும்பங்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தேவையான உலருணவுப் பொருள்களை சுயம் சேவா சங்கத்தினூடாக வழங்கினார். இதன்போது ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இவரால் நன்மையடைந்தனர். அத்துடன் தாய் தந்தையை இழந்த பிள்ளைகளின் கற்றலுக்காக மாதாந்தம் ஒரு தொகைப் பணத்தை சர்வதேச சேவா அறக்கட்டளையின் ஊடாக தொடர்ச்சியாக மாதாந்தம் வழங்கி வருகின்றார். மேலும் அறநெறி பாடசாலைகளை நிறுவி அதற்கு தேவையான அனைத்து வளங்களை வழங்கி வருகின்றார். க.பொ.த.சாதாரணதரத்தில் சகல பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்ற மாணவர்களை பல வருடங்கள் இவர் நண்பர்களின் ஒத்துழைப்போடு கௌரவித்துள்ளார். பல பாடசாலைகளுக்கு ஆங்கில புத்தகங்களை வழங்கியுள்ளதோடு அமெரிக்கா நாட்டின் தொண்டராசிரியர்கள் இங்கு வந்து கடமையாற்ற ஏதுவாகவும் இருந்துள்ளார். ஆங்கில புலமை, மும்மொழி ஆளுமை, சமய சொற்பொழிவாளர், சிறந்த பேச்சாளர் என பல்வேறு ஆளுமையை கொண்ட இவர் சிறந்த பேச்சாளராக ஜனாதிபதி விருதினையும் பெற்றுள்ளார். இவர் தேசிய ரீதியில் சிறந்த பேச்சாளராக நான்கு முறை விருதுகளை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கலைமாணி, முதுமாணி மற்றும் ஆங்கில மொழி மூல விசேட டிப்ளோமா பட்டங்களை பெற்றுள்ள இவர் இராகலை விஸ்வநாதன் தனபாக்கியம் தம்பதியினரின் புதல்வராவார்.



# நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை இராணுவ முகாம், பல்கலைக்கழகத்தில் முன்னெடுப்பு!

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை நேற்று காலை முதல் வீடுகள் இராணுவ முகாம் பல்கலைக்கழக வளாகம் என்பனவற்றில் புகைவிசிறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் வழிகாட்டலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். நௌசாத் தலைமையில் கள நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து இனம் காணப்பட்ட இடங்களுக்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த புகைவிசிறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இராணுவப் பொறுப்பதிகாரியின் கோரிக்கைக்கு இணங்க மல்வத்தை இராணுவ முகாம் மற்றும் பீடாதிபதி எம்.எச்.ஹாரூன் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக கணித விஞ்ஞான பீடத்திலும் அதன் விடுதியிலும் நுளம்புக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.





இதனை தொடர்ந்து மேற்பார்வை உத்தியோகத்தர்கள் பொது சுகாதார பரிசோதகர்கள் நுளம்பு கட்டுப்பாட்டு பணியாளர்கள் நிகழ்வுகளின் பின்னர் டெங்கு நுளம்பு பரவலை தடுக்கும் நடைமுறையில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து தெளிவுபடுத்தினர்.

# கிண்ணியாவில் இளைஞர் கழகம் அமைத்தல் மற்றும் மறுசீரமைப்பு

(ஹலால்தீன்)

இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணைந்து நாடளாவிய ரீதியிலே ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளுக்கும் இளைஞர் கழகங்களை அமைத்து வருகின்றன.

பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் இளைஞர்கழகங்களை உருவாக்குவதற்கும் மற்றும்மறுசீரமைப்பிற்குமானநிகழ்வுபிரதேச கிண்ணியா செயலகத்தில் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியிலே அனைத்து பிரதேச செயலகங்களிலும்கழகங்களைஅமைக்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றன. கிண்ணியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம் எச் எம் கனி தலைமையின் கீழ் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கிண்ணியாபிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் என் நுஸ்ரி, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சரின் செயலாளர் முகம்மட் இம்ரான், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி





யுவராஜ் குமார், முன்னாள் உலமா சபை தலைவர் ஹிதாயத்துல்லா மௌலவி, கிராம சேவை அதிகாரி வி மகிஷா, அபிவிருத்தி உத்தியோகத்தர் டபிள்யு. கிரிஸ்மியா உட்பட இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கிண்ணியாபிரதேசத்தில்பதிவுசெய்யப்பட் கழகங்களை மறுசீரமைப்பதற்கும் மற்றும் புதிதாக அமைக்க வேண்டிய கழகங்களை உருவாக்குவதற்கும் இந்நிகழ்வு இடம் பெற்றன.

நிகழ்வின் இறுதியில் புதிய இளைஞர் கழகங்களும் உருவாக்கப்பட்டன.

# மருதமுனையில் மாணவர் படிப்பகம் திறந்து வைப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் மாணவர் படிப்பகம் புதன்கிழமை இரவு திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினர், கல்வியலாளர்கள், ஊர் பொதுமக்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் கல்வியில் மேலதிக திறமைகளை ஊக்குவிப்பதற்கான பல வழிகள் உள்ளன. குறிப்பாக, மாணவர்களின்தனிப்பட்ட திறமைகளை வெளிக்கொணர உதவும் கல்வி முறைகள், பாடத்திட்டங்கள் மற்றும் வழிகாட்டல் முறைகளைத் தூண்டலாம். இதோடு, தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வி, மொழிப் பயிற்சி, கலை மற்றும் விளையாட்டுப் பாடத்திட்டங்கள், சமூகப் பணி மற்றும் தன்னார்வத் தொண்டு போன்றவற்றை கல்வி முறையின் ஓர் அங்கமாக இணைத்து மேலதிக திறமைகளை இவ்வாறான படிப்பகம் ஊடாக ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டகின்றது.

அத்துடன், சமூகத்தில் ஒரு பயனுள்ள அங்கமாக இருக்க உதவுகின்ற கல்வியால் எதிர்காலத்தில் சமூகத்திற்கு திறமையான, பயனுள்ள நபர்களை உருவாக்க முடியும் என குறித்த நிகழ்வில் கலந்த கொண்டோர் குறிப்பிட்டனர்.




# சம்மாந்துறையில் அரச சேவை உத்தியோகத்தர்களுக்கு கருத்தரங்கு!

(சர்ஜூன் லாபீர்)

பிரபல சமூக ஆய்வாளரும், பன்னுலாசிரியரும், சிறந்த பேச்சாளருமான கலாநிதி ரவூப் ஸெய்ன் அவர்களால் 'அரச சேவையும், சமூக பொறுப்புக்களும்' எனும் தலைப்பில் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு கருத்துப் பரிமாற்றல் நிகழ்வு நேற்று(வெள்ளிக்கிழமை) பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.







நவீனகாலத்திற்கேற்ப அரச சேவையை வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைப்பதற்கு ஊழியர்களின் பங்களிப்பு எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதுடன்,நேர்மையான அரச உத்தியோகத்தராக மக்கள் சேவை எவ்வாறு மேற்கொள்வது போன்ற பல்வேறுபட்ட விடங்கள் பற்றி இந்நிகழ்வில் கருத்து ரைக்கப்பட்டது.

# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவு விற்பனை ஆறு கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

பொதுமக்களுக்குச்சிறந்த மற்றும் பாதுகாப்பான உணவுப் பொருட்களை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு சம்மாந்துறை சுகாதாரப் பிரிவினர் உணவு நிலையங்களில் அதிரடி பரிசோதனைகளை மேற்கொண்டு ஆறு கடை உரிமையாளர்கள் மீது வழக்கு தாக்கல் மேற்கொண்டனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட இனிப்புக் கடைகள் பலசரக்குக் கடைகள் மற்றும் கோழி இறைச்சிக் கடைகள் என்பன இவ்வாறு கடந்த புதன்கிழமை பரிசோதிக்கப்பட்டன.



இதன்போது காலாவதியான மற்றும் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த ஆறு கடை உரிமையாளர்கள் மீது உணவுச் சட்டத்தின் கீழ் வியாழக்கிழமை வழக்குத் தொடரப்பட்டது.



இதன்போது சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ஆறு கடை உரிமையாளர்களில் நான்கு பேருக்கு தலா 5 000 ரூபா வீதம் மொத்தம் 20000 ரூபா அபராதம் விதித்தார்.மேலும் மன்றிற்கு சமுகமளிக்காத இரு வர்த்தகர்களுக்கும் வேறு ஒரு திகதி நீதிமன்றத்தால் தவணை அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் வழிகாட்டலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். நௌசாத் தலைமையில் பல்வேறு செயற்திட்டங்களை மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பொதுச்சுகாதார பரிசோதகர் சுகாதார ஊழியர்கள் மன்னெடுத்த வருகின்றனர்.

# இலங்கையின் மத்ரஸா கல்வி நூல் அறிமுகம்

(சர்ஜுன் லாபீர்)

கலாநிதிரவூப்ஸெய்ன்தொகுத்துஎழுதிய ‘இலங்கையின்மத்ரஸாகல்விநூல்அறிமுக விழா‘ சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலக கலாச்சார பிரிவு மற்றும் அம்பாறை மாவட்ட றாபிததுன் நழீமிய்யீன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நூல் அறிமுக நிகழ்வில் நூல் அறிமுக உரையினை ஓய்வு பெற்ற சிரேஸ்ட நிர்வாக அதிகாரியும்,சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்றாவின் தலைவர் அஷ்ஷேக் எம்.ஐ அமீர்(நழீமி)அவர்களால் நிகழ்த்தப்பட்டது. நூலாசிரியர் கலாநிதி ரவூப் ஸெய்னின் சிறப்புரையோடு அம்பாறை மாவட்ட ராபிததுன் நழீமிய்யீன் தலைவர் அஷ்ஷேக் எம்.ஐ.எம் இஸ்ஹாக்(நழீமி)அவர்கள் நன்றியுரையோடு நிகழ்வு நிறைவடைந்தது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை உதவிப் பிரதேசசெயலாளர்யூ.எம்அஸ்லம்,முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் எம்.எம் நஸீர்,ஓய்வு பெற்ற சிரேஸ்ட நிர்வாக அதிகாரியும்,சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்றாவின் தலைவர் அஷ்ஷேக் எம்.ஐ அமீர்(நழீமி)பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமில், அம்பாறை மாவட்ட ராபிததுன் நழீமிய்யீன் தலைவர் அஷ்ஷேக் எம்.ஐ.எம் இஸ்ஹாக்(நழீமி),தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் மன்சூர் ஏ காதர் உட்பட கல்விமான்கள், உலமாக்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# சாய்ந்தமருதில் போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளை வலுவூட்டும் நோக்கில் சமுதாய அமைப்பின் நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கி வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.





சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடையாள அட்டைகளைவழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில்பிரதேசசெயலக கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்திவங்கிசங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜஃபர், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களைவழிநடத்தும்அபிவிருத்தி உத்தியோகத்தர்றிகாஸாஷர்பீன்,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம்.அபுல் ஹுதா, எம்.எம். ஜாபீர், சமுர்த்தி பிரதேச சமுதாய அமைப்பின் தலைவர் கே.எம்.கபீர், பொருளாளர் யூ.எல்.ஜுனைதா உள்ளிட்ட சமுதாய அடிப்படை அமைப்புகளின் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





இதன்போது சமுதாய அடிப்படை அமைப்புகளின் நிர்வாகிகள் 200 பேருக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டது. சாய்ந்தமருதில் மே 31 - ஜுன் 17 வரை வீடு வீடாக போதைப்பொருள் மற்றும் புகைத்தல் எதிர்ப்பு பிரச்சாரத்தினை மேற்படி சமுர்த்தி சமுதாய அமைப்புக்களின் நிர்வாகிகள் உள்ளிட்ட உறுப்பினர்கள் மேற்கொள்ளஇருப்பதுகுறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஜுன் 04 ஆம் திகதி சாய்ந்தமருதில் போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு நடத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

## வேறொருவரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்தானந்த அழுத்கமகேவை சிறையிலடைப்பதற்கான முறைப்பாடளித்தது நாமே தவிர, ஜே.வி.பி. அல்ல. தேசபந்து தென்னகோனுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற எதிர்க்கட்சி தலைவர்களுக்கிடையிலான சந்திப்பில் அன்று அநுரகுமார திஸாநாயக்க அவ்வாறு முறைப்பாடு செய்யப்படுவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியே அந்த வழக்கையும் தொடுத்தது.

அதன் பின்னரே பேராயரும் நீதிமன்றம் சென்றார். வேறொருவரின் குழந்தைக்கு அநுரகுமார திஸாநாயக்க பிறப்புச்சான்றிதழை தயாரிக்க முயற்சிக்கின்றார். பலருக்கு இது புரியவில்லை. இதுவே அநுரகுமாரவின் அதிகபட்ச திறனாகும். பாதாள உலகக் குழுவினருடன் எதிர்க்கட்சிகளுக்கு தொடர்பிருப்பதாகக் கூறினார்.

அவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியில் எவரேனும் இருந்தால் பகிரங்கமாகக் கூறுமாறு எதிர்க்கட்சி தலைவர் சவால் விடுத்தார். ஆனால் இதுவரை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அதற்குப் பதிலளிக்கவில்லை.

நாடாளுமன்ற சிறப்புரிமைகளுக்குள் ஒளிந்து கொண்டிருக்காமல், நாடாளுமன்றத்திற்கு வெளியில் அல்லது பெலவத்த அலுவலகத்திலாவது இது தொடர்பில் கூறுமாறு ஆனந்த விஜேபாலவுக்கு சவால் விடுகின்றோம். நாடாளுமன்றத்திற்குள் வைத்து இவ்வாறான பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் எம்மால் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. ஆளும்தரப்புத்தின் போலி பரப்புரைகளுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை.

பெரும்பான்மை இன்றி ஆளும்தரப்பு எவ்வாறு கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைக்கும்? 50 சதவீத ஆசனங்கள் இன்றி அவர்களது இஷ்டத்திற்கு ஆட்சியமைப்பதாயின் அது மக்கள் ஆணை அல்ல. மக்கள் ஆணை என்ன என்பது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்று அரசியல்வாதிகளின் பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்பதை எதிர்த்த ஜே.வி.பி., இன்று கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மாணவர்களுக்கான வாய்ப்பினை பறித்து அவற்றை வெளிநாட்டவர்களுக்கு வழங்குகிறது என்றார்.

## 23 ஆயிரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

கடந்த வாரம் மாத்திரம் 1678 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். டெங்கு மற்றும் சிக்கன்குனியா என்பன வைரஸால் பரவுகின்ற நோயாகும். இவை இரண்டும் நோயும் நுளம்புகளால் பரவுகிறது.

நாட்டில் இதுவரை 500 கும் மேற்பட்ட சிக்குன்குனியா தொற்றாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் வெளிநோயாளர் பிரிவுகளை சிகிச்சையினை பெற்று செல்லும் நோயாளர்கள் தொடர்பில் எவ்வித தரவுகளும் இல்லை. ஆகையால் சமூகத்தில் நோயால் பாதிப்புக்குள்ளாகிய பலர் உள்ளனர். மழையுடன் கூடிய கால நிலையோடு நுளம்பு குடம்பிகளின் பெருக்கம் வெகுவாக அதிகரித்துள்ளதாக குடம்பியியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பருவப் பெயர்ச்சியை தொடர்ந்து ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் இந்நிலை மேலும் மோசமடைய வாய்ப்புள்ளது. மே 19 முதல் 24 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்ட நுளம்பு ஒழிப்பு வாரத்தின் போது சுமார் 1 இலட்சம் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இந்நிலையில் அதன் தொடர்ச்சியாக நுளம்பு பெருக்கத்தை கட்டுபபடுத்துவதற்கதக இம்மாதமும் டெங்கு ஒழிப்பு வாரத்தை பிரகடனப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

இதேவேளை இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் சுரந்த பெரேரா குறிப்பிடுகையில்,

கடுமையான மூட்டு வருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய சிக்குன்குன்னியாவிடமிருந்து பச்சிளம் குழந்தைகளையும் வயோதிபர்களையும் பாதுகாப்பது அவசியம். பிரசவ காலம் நெறுங்கியுள்ள தாய்மார்கள் அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். நோய் தொற்றுக்கு ஆளாகும் பட்சத்தில், குழந்தைப் பிறந்து ஒரு வாரக் காலப்பகுதியில் சிக்குன்குனியா ஏற்படலாம். இதனால் குழந்தையின் இதயம் மற்றும் மூளை உள்ளிட்ட உறுப்புகள் பாதிக்கப்படலாம்.

ஆகையால் தொடர்ச்சியாக இருநாட்களுக்கு மேல் கடுமையான காய்ச்சல் நிலவும் பட்சத்தில் உடனடியாக வைத்தியசாலையை நாடுவது அவசியம் என்றார். டெங்கு மற்றும் சிக்கன்குனியா ஆகிய இரண்டு நோய்களும் ஒரே சமயத்தில் ஒருவருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிக்கலான நிலைமைகளும் உருவாகலாம். ஆகையால் நுளம்பு தாக்கத்திலிருந்து அனைவரும் பாதுகாப்பு பெறுவது அவசியம் என்றார்.

## லஞ்ச ஊழல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்ய வேண்டும் என்பது தொடர்பில் ஆலோசனை பெறுவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த கருத்து சுயாதீன இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை அவமதிப்பதாகும்.

2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் 118 ஆவது பிரிவில் ‘ இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் வெளியாட்கள் தலையிடுவதும், ஆணைக்குழுவை அவமதிப்பதும் குற்றச்செயலாக கருதப்படும்‘ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்சவின் கருத்து ஆணைக்குழுவை அவமதிப்பதாகவும் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. ஆகவே இவரது கருத்துக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளோம்.

ஆட்சியில் இருக்கும் போது அரச அனுசரணையுடன் அரச நிதியை மோசடி செய்த ஊழல்வாதிகள் தற்போது கலக்கமடைந்துள்ளார்கள். சுயாதீன ஆணைக்குழு ஊழல்வாதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஊழல் இலஞ்ச மோசடியால் தான் இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளது என்றார்.

## இலங்கையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாக சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங்வென்டாவோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங்வென்டாவோ நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பு செயல்படுத்தும் வெளிப்படையான வேலைத்திட்டம் காரணமாக சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த அமைச்சர் 100க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களுடனான இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

சவாலான காலகட்டத்தில் இருநாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் வர்த்தகம் மற்றும் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் உலகளாவிய பொருளாதாரஸ்திரமின்மையை எதிர்கொள்ளும் போது இலங்கைக்கு தேவையான ஆதரவை வழங்க சீனா அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சீன வர்த்தக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கடந்த சீன விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது சீன வர்த்தக அமைச்சரின் இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

மேலும் சீன ஆளும்தரப்புத்தின் ஆதரவுடன் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவுசெய்தல் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென்ஹொங் ஆசிய விவகாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வன்ங் லிபிங் வெளியுறவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஷு ஜீ வேட்டிங் ஆகியோர் உள்ளிட்ட குழு சீன பிரதிநிதிகள் குழு சார்பாகவும்

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வர்த்தகஇ வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கஇ ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## 9 மாவட்டங்களில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் 485 குடும்பங்களைச் சேர்ந்த 1757 பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு 3 வீடுகள் முழுமையாகவும், 365 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. அதேவேளை கடந்த 27ஆம் திகதி புத்தளம் ஆராச்சிகட்டுவ பிரதேசத்தில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு தெமட்டகொட பிரதேசத்தில் தொழிற்சாலையொன்றின் மதில் சுவர் இடிந்து விழுந்ததில் பெண்கள் இருவர் உள்ளிட்ட மூவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு பருவ பெயர்ச்சி காரணமாக மேற்கு, சப்ரகமுவ மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீட்டருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாளை மறுதினம் திங்கட்கிழமையின் பின்னரே காலநிலையில் மாற்றம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தெற்கு, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணிக்கு 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இதன் போது கடலோரப் பகுதிகளில் மணிக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கொக்கைனுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை வெளிநாட்டு பயணி ஒருவரின் சந்தேகத்திற்கிடமான பயணப் பொதியை சோதனையிட்டப் போதே குறித்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மூன்று பொம்மைகளின் உட்பகுதியில் போதைப்பொருள் அடங்கிய வில்லைகளை வைத்து கட்சிதமான முறையில் அவற்றைத் தைத்து பயணப் பொதியினுள் மறைத்து நாட்டிற்கு எடுத்து வந்துள்ளார்.

இந்நிலையில் பயணப்பொதி சோதனை இடம்பெற்றபோது மோப்பநாயின் உதவியுடன் மேற்படி போதைப்பொருள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது. பொம்மைகளின் உட்பகுதியிலிருந்து 500 போதைப்பொருள் அடங்கிய வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதற்கமைய சந்தேகநபரிடமிருந்து சுமார் 10 கிலோ 323 கிராம் எடையுடைய கொக்கைன் மீட்கப்பட்டுள்ளதாக சுங்கப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கொக்கைன் 51 கோடியே 61 இலட்சத்து 53 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்கது என சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கைதான சந்தேகநபர் 38 வயதான இத்தாலியை சேர்ந்த பெண் பிரஜையாவார். தோஹா விமான நிலையத்திலிருந்து அதிகாலை 2.00 மணியளவில் கட்டார் ஏர்வேஸ் விமான சேவைக்கு சொந்தமான கிவ்.ஆர் 662 என்ற விமானத்தின் ஊடாக நேற்று நாட்டை வந்தடைந்துள்ளார். கைதான சந்தேகநபர் மற்றும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொடர்பில் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை விமான நிலையத்தில் சுங்கப் பிரிவினருக்கு முன்னறிவிப்பின்றி சட்ட விரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 34 இலட்சம் 50 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க வெளிநாட்டு உயர் ரக சிகரெட்டுகளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தெரனியாகல பகுதியை சேர்ந்த 46 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




# மருதமுனை பொது நூலகத்திற்கு அல்மனார் மாணவர்; களப் பயணம்

(அஸ்லம்)

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தரம்-03 மாணவர்களில் ஒரு தொகுதியினர் மருதமுனை மருதூர்கனி ஞாபகார்த்த பொது நூலகத்திற்கு வியாழக்கிழமை களப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது இவர்கள் நூலகத்தின் சகல பகுதிகளையும் பார்வையிட்டதுடன் நூலகத்துடன் தொடர்புடைய பல்வேறு தகவல்களையும் பெற்றுக் கொண்டனர்.

நூலகர் ஹரீஷா அப்துல் காதர் மாணவர்களுக்கு நூலகத்தின் செயற்பாடுகள், அங்கத்தவராக இணைவதற்கான வழிமுறை, நூலகத்தை எவ்வாறு பயன்படுத்துவது, வாசிப்பு ஒரு மனிதனுடைய வாழ்வில் எவ்வாறு நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் போன்ற விடயங்கள் பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இதன்போது நூலகத்தை மேற்பார்வை செய்வதற்காக வருகைதந்திருந்த கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீமும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துக் கூறியதுடன் அனைத்து மாணவர்களும் நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டு நூலகத்தை பயன்படுத்தி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். இதன் மூலம் எதிர்காலத்தில் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக திகழ முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் நூலக உதவியாளர்களான எம்.எஸ்.எட். சஞ்சிதா, கே.வனஜா ஆகியோர் மாணவர்களுக்கு கதை கூறி மகிழ்வித்தனர். இந்நிகழ்வில் குறித்த மாணவர்களின் வகுப்பு ஆசிரியைகளும் கலந்து கொண்டிருந்தனர்.





# இவ்வருடமும் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவரின் கோரிக்கைக்கமைய 20 பேருக்கு ஹஜ் செய்ய சந்தர்ப்பம்!

(சினீஸ் கான்)



இரு புனித மஸ்ஜித்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களால் உலகளாவிய ரீதியில் 100 நாடுகளைச் சேர்ந்த 1300 பேருக்கான தனது முழு செலவில் 'மன்னர் விருந்தினராக' அழைக்கப்பட்டு ஹஜ் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

இஸ்லாமிய உலகம் முழுவதும் உள்ள மத, கல்வி மற்றும் அறிவுசார் தலைவர்களுடன் உறவுகளை வலுப்படுத்தவும், நாகரிக மற்றும் மத உரையாடலை ஊக்குவிக்கவும், தனித்துவமான மற்றும் மூலோபாய முயற்சியாக இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் நஸார் அல்தஸம் அல்கஹ்தானி அவர்களின் கோரிக்கைக்கமைய

இம்முறையும் இலங்கைக்கு 20 பேர் பயணிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

அதேபோல் வருடாவருடம் இலவசமாக உம்ரா செய்யும் சந்தர்ப்பமும் தூதுவர் மூலமாக இலங்கை மக்களுக்கு கிடைப்பது குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# காரைதீவு, ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி, பொத்துவில் ஆகிய பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு உடன்பாடு

## தமிழரசின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் கூறுகிறார்

(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு, ஆலையடிவேம்பு , நாவிதன்வெளி, பொத்துவில் ஆகிய நான்கு பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பதற்கான இறுதிக்கட்ட உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் ஓரிரு தினங்களில் இங்கு விஜயம் செய்ய விருக்கும் எமது கட்சியின் தலைவர் சிவஞானம் மற்றும் செயலாளர் சுமந்திரனிடம் இதனை சமர்ப்பித்து கலந்துரையாடி இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பொத்துவில் தொகுதி அமைப்பாளருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார் .



அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி அமைப்பு மற்றும் தவிசாளர், உப தவிசாளர், பட்டியல் உறுப்பினர்கள் தேர்வுகள் எந்தக் கட்டத்தில் உள்ளன? என்ற கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காரைதீவு பிரதேச சபையில் எமது தமிழரசு கட்சியுடன் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதுபோல பொத்துவில் பிரதேச சபையிலும் முஸ்லிம் காங்கிரஸ் உடன் எமது கட்சி இணைந்து ஆட்சி அமைக்க உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

நாவிதன்வெளி மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபைகளில் எமது தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க அங்குள்ள சுயேச்சை குழு இணக்கம் தெரிவித்து இருக்கின்றன.

எனவே, இந்த நான்கு இடங்களிலும் ஆட்சியமைப்பதற்கான இறுதி முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.

தவிசாளர் உபதவிசாளர் தெரிவு;

காரைதீவு பிரதேச சபையில் தமிழரசு கட்சி உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், மு.கா உறுப்பினர் உப தவிசாளராகவும் தெரிவதற்கு இணக்கம் காணப்பட்டது.

எமது இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு பிரதேசக் கிளை சேர்ந்து தவிசாளர் தெரிவு தொடர்பாக, தெரிவான வேட்பாளர்கள் உறுப்பினர்கள் மற்றும் கிளைக்குழு உறுப்பினர்கள் இணைந்து கலந்துரையாடி முடிவெடுத்து எங்களுக்கு அறிவித்துள்ளன.

அதன்படி அங்கு கூடுதல் வாக்குகளைப் பெற்ற முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறிலை தெரிவுசெய்ய பெரும்பான்மையாக முடிவெடுத்திருக்கிறார்கள்.

ஆலையடிவேம்பில் முதல் இரண்டு வருடங்கள் எமது கட்சியின் உறுப்பினர் தவிசாளராக இருப்பார், உப தவிசாளராக சுயேச்சை அணியின் தலைவர் இருப்பார் . அவரை எமது கட்சிக்குள் உள்வாங்கிக் கொண்டு அடுத்த இரண்டு வருட காலத்தில் அவர் தவிசாளராகக் கடமை ஆற்றுவார் .எமது கட்சியைச் சேர்ந்தவர் உபதவிசாளராகக் கடமை ஆற்றுவார்.

நாவிதன்வெளி பிரதேச சபையில் எமது உறுப்பினர் தவிசாளராகவும்

சுயேச்சை அணியின் தலைவர் உப தவிசாளராகவும் கடமை ஆற்றுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

பொத்துவில் பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் தவிசாளராகவும், எமது உறுப்பினர் உபதவிசாளராகவும் இயங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் இந்த உடன்பாடுகள் ஓரிரு நான்களில் இங்கு விஜயம் செய்ய உள்ள தமிழரசுக்கட்சியின் தலைவர் சிவஞானம், செயலாளர் சுமந்திரன் ஆகியோரிடம் கலந்துரையாடிய பின்பே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் சொன்னார்.



காலைக்கதிர் Kalaikkathir

# பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தின் பொதுக்கூட்டம் ஜூன் 14 இற்குள் நடத்துக!

## கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி இணக்கத் தீர்ப்பு

( சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கல்முனை பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய பொதுக்கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி நடத்தவேண்டும் . மேலும் இப் பொதுக் கூட்டத்திற்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் அது தொடர்பான அறிவிப்புகளை சகலருக்கும் வழங்க வேண்டும்.

கல்முனை மாவட்ட நீதிபதி ஏ .எம். எம் .றியாழ் இந்த இணக்கத் தீர்ப்பை வழங்கினார் .

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய நிர்வாகம் தொடர்பான வழக்கு கடந்த வாரம் நீதிபதி எ.எம்.எம். றியாழ் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இ.மதனகாந்த் உள்ளிட்ட 11 மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி நதீர் சட்டத்தரணி மிப்றா ஆகியோர் ஆஜரானார்கள்.

அம்பாறை அரசாங்க அதிபர் ,கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் சுசுரேஸ், சி.ஈஸ்பரன் ஆகிய பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி ஏ. ஆர். எம் கலீல் ,சட்டத்தரணி பாத்திமா உடன் சட்டத்தரணி அப்பாஸ், அரசதரப்பு சட்டத்தரணி பிரஷாந்தனுடன் சட்டத்தரணி ராசிமும் தெரிபட்டார்கள்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர் இந்த வழக்கினது பிணக்கினை சில நிபந்தனைகளின் பிரகாரம் சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்ள இருப்பதாக மன்றுக்கு தெரிவித்தார்கள்.

அதனையடுத்து நீதிபதி றியாழ் இணக்கத் தீர்ப்பை வழங்கினார்.

அதாவது..

தற்சமயம் குறித்த ஆலயத்தின் பரிபாலன சபையாக செயற்பட்டு வருகின்ற சபையானது ஆலயம் தொடர்பான பொதுக்கூட்டத்தினை 14.6.2025 ஆம் திகதி நடத்துவது என்றும், இப்பொதுக் கூட்டத்திற்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் அதுதொடர்பானஅறிவிப்புகளை சகலருக்கும் வழங்குவது எனவும் இணக்கம் காணப்பட்டது .

இந்த பொதுக்கூட்டமானது அந்த ஆலயமானது அமைந்துள்ள பகுதிக்கு பொறுப்பாக உள்ள பிரதேச செயலாளரின் அல்லது குறித்த பிரதேச செயலகத்தை சேர்ந்த கலாசார உத்தியோகத்தரின் மேற்பார்வையில் அல்லது கண்காணிப்பின் கீழ் நடத்துவது எனவும் இணக்கம் காணப்பட்டது.

மேலும் கல்முனை மாவட்ட நீதிமன்ற பதிவாளர் அவர்களும் குறித்த தினத்தில் அவ்விடத்தில்பிரசன்னம்ஆகிஇருக்கவேண்டும் என்றும் அவர் அங்கு நடைபெற்ற கூட்டம் தொடர்பிலான அறிக்கையினை மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டது .

இதற்கமைய செயற்படவேண்டும் எனவும் அறிக்கை இடப்படவேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

வழக்கின் அடுத்த தவணை 25. 6. 2025 ஆம் திகதி இடம்பெறும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

# குடும்பப் பெண் மர்மமான முறையில் பெரியநீலாவணையில்சடலமாக மீட்பு!

( பாறுக் ஷிஹான்)

வெட்டுக் காயங்களுடன் மர்மமான முறையில் குடும்பப் பெண்ணின் சடலம் பெரிய நீலாவணை பொலிஸாரால் நேற்று (வெள்ளிக்கிழமை) மீட்கப்பட்டுள்ளது.

பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஷ்ணு கோயில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தனித்திருந்த 37 வயதுமதிக்கத்தக்கபெண்மீதுஇப்படுகொலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு பிள்ளைகளின் தாயான குறித்த பெண் மீது கழுத்து மற்றும் தலை உள்ளிட்ட பகுதில் பல வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன என ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மரணமடைந்த குடும்ப பெண்ணின் கணவர் வெளிநாடு ஒன்றில் தொழில் நிமிர்த்தம் தங்கியுள்ளதாகவும் கொலை இடம்பெற்ற போது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி காணொளிகளை சேமிக்கும் கருவி கொலையாளியினால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.05.2025இல் வெளியிடப்பெற்றது